## பெப்ரவரி – 24 – சனி

**புனித மார்த்தா அருளப்பர்**

**"உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்" (மத்.5:48)**

### முதல் வாசகம் : இணைச்சட்டம் 26 : 16 – 19

அக்காலத்தில் மோசே மக்களை நோக்கிக் கூறியது: இந்த முறைமைகளையும் நியமங்களையும் நீ நிறைவேற்றுமாறு உன் கடவுளாகிய ஆண்டவர் இன்று உனக்குக் கட்டளையிட்டுள்ளார். உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் அவற்றை நிறைவேற்றுவதில் கருத்தாயிரு.ஆண்டவரை உன் கடவுளாய் ஏற்பதாகவும் உனக்குக் கடவுளாக இருப்பார் என்றும், அவருடைய வழிகளில் நடப்பதாகவும், அவருடைய நியமங்களையும், கட்டளைகளையும் முறைமைகளையும் கடைப்பிடிப்பதாகவும், அவர் குரலுக்குச் செவி கொடுப்பதாகவும் இன்று நீ அவருக்கு வாக்களித்துள்ளாய். நீ அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிருந்தால், அவர் கூறியபடியே நீ அவருக்குச் சொந்தமான மக்களினமாய் இருப்பாய் என்றும்,அவர் உருவாக்கிய எல்லா மக்களினங்களிலும், புகழிலும், பெயரிலும், மாட்சியிலும் உன்னையே உயர்த்துவார் என்றும், அதனால் உன் கடவுளாகிய ஆண்டவரின் தூய மக்களினமாய் நீ இருப்பாய் என்றும் ஆண்டவர் இன்று உனக்கு வாக்களித்துள்ளார்.

**பதில்பாடல்:** ஆண்டவர் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர்.

### நற்செய்தி : மத்தேயு5 : 43 - 48

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக", "பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக எனக் கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள்.ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள் உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்."இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார்.உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? வரி தண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா? நீங்கள் உங்கள் சகோதரர் சகோதரிகளுக்கு மட்டும் வாழ்த்துக் கூறுவீர்களானால் நீங்கள் மற்றவருக்கும் மேலாகச் செய்துவிடுவதென்ன? பிற இனத்தவரும் இவ்வாறு செய்வதில்லையா?ஆதலால், உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்" என்றார்.

**தியானம்:** கடவுள் தனது சாயலிலும் உருவிலும் மனிதர்களைப் படைத்து அவர்களை ஆசீர்வதித்து நீங்கள் பலுகிப்பெருகி (தொ.நூ.1:28) இந்த பூமியை மகிழ்வால், அன்பால், அமைதியால் நிரப்புங்கள் என்றுரைத்தார். சாத்தானின் சூழ்ச்சிக்கு பலியான மனிதர்கள் பாவத்தின் சம்பளமான இறப்புக்கு தங்கள் வாழ்வை தேர்ந்துகொண்டார்கள். இதன் பயனாக இன்பவனமாக இருக்கவேண்டிய ஏதேன் தோட்டம், முட்களையும், புதர்களையும் தோற்றுவித்தது. (தொநூ.3:18) இன்பமாக இருக்க வேண்டிய இந்த வாழ்க்கை அவனுக்கு நரகமாக தோற்றமளித்தது. ஒருவரை ஒருவர் நிறைவு செய்வதற்காக படைக்கப்பட்ட மனிதர்கள் ஒருவருக்கொருவர் எதிரிகளாக மாறிப்போயினர். மனித மனங்களில் கோபமும் வெறுப்பும் அதன் பயனாக குரோதமும் பழிவாங்குகின்ற தன்மைகளும் வளர வளர கொலை, பழிக்குப்பழி வாங்குதல், வெறுப்பு, கோபம் என்று சாத்தானின் சக்திகளுக்கு தங்களை விற்றுப்போட்டனர். நன்மைகள் செய்வதற்காக படைக்கப்பட்ட மனிதன், அன்பு செய்வதற்காகப் படைக்கப்பட்ட மனிதன், கடவுளின் எண்ணங்களுக்கு மாறாக அவர்களின் இதயச் சிந்தனைகள் எல்லாம் தீமையையே உருவாக்குவதையும், மண்ணுலகில் மேலும் மேலும் பாவங்கள் செய்து மனிதன் இறைவனின் பிரசன்னத்தை விட்டு விலகிச் செல்வதையும் இறைவன் கண்டு மனம் வருந்தினார். (தொ.நூ.6:5-6) மேலும் இந்நிலையை மாற்றுவதற்காக தன்னுடைய இதய அன்பால் இந்த உலகம் இயக்கப்படுவதற்காக தன்னுடைய ஒரே அன்பு மகனை இந்த உலகிற்கு அனுப்பினார். நம்முடைய பாவ வாழ்வினால் சம்பாதித்துக் கொண்ட சாபங்களை, வெறுப்புக்களை, காயங்களை நீக்குவதற்காக அவர் இந்த உலகிலே அன்பின், மன்னிப்பின் வடிவமாக செயலாற்றி முன்மாதிரி காட்டி சிலுவையில் மரித்து இறைவனின் அன்பு இன்னதென்று நிரூபித்துக்காட்டினார். நாம் இறைவனின் முன்மாதிரியான இயேசுவைப் பின்பற்றினால் வாழ்வைப் பெறுவோம் மாறாக இந்த உலகம் நமக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் பகைமை, வெறுப்பு, பழிக்குப்பழி வாங்குவது இவற்றைப் பின்பற்றினால் இறைவனின் பிரசன்னத்தை இழப்போம். சிலுவையே நமக்கு முன்மாதிரி அவருடைய கல்வாரி அன்பே நமக்கு மீட்பு. "அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள் (1யோவா.4:7). "பிள்ளைகளே நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம்". (1யோவா.3:18) "தீமைக்குப்பதில் தீமை செய்யாதீர்கள்ளூ எல்லா மனிதரும் நலமெனக் கருதுபவை பற்றியே எண்ணுங்கள். இயலுமானால் உங்களால் முடிந்தவரை எல்லாரோடும் அமைதியுடன் வாழுங்கள். அன்பார்ந்தவர்களே பழிவாங்காதீர்கள்.. தீமை உங்களை வெல்லவிடாதீர்கள், நன்மையால் தீமையை வெல்லுங்கள்" (உரோ.12:17-21). அப்போது, உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவுள்ளவராய் இருக்க முடியும்.